**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093694

1. District மாவட்டம் : நாகப்பட்டினம். PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year ஆண்டு: 2020 FIR No. மு.த.அ. எண்: 07/2020 Date நாள்: 12.12.2020

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 102 CrPC. and 7, 7. A
   (ii) Act சட்டம்: 102 CrPC. Sections பிரிவுகள்: of the Prevention of Corruption
   (iii) Act சட்டம்: PC Act. Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period நேர அளவு : 11.12.2020 Time from நேரம் முதல் : 18.30 Hrs Time to நேரம் வரை : 23.00 Hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2020 Time நேரம் : 03.00 Hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 2 கி.மீ வடக்கு, வட்டார
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி போக்குவரத்து அலுவலகம், பால்பண்ணைச்சேரி, நாகப்பட்டினம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.K. மணிவண்ணன் (b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் காசிராமன்.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 56/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கோட்ட கலால் அலுவலர் / நிர்வாக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி - வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. S. உதயகுமார், 58/2020, S/o. செங்கோடன், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர். 2. திரு. R. சோமநாதன், 38/2020, த/பெ. ராமலிங்கம், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர், 3. திரு. C. தனபாலன். 52/2020, த/பெ. சின்னரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்பிக்கப்படுகிறது இன்று 12.12.2020 ஆம் தேதி காலை 03.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் M.அருள்பிரியா ஆகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது திரு.K.மணிவண்ணன், கோட்ட கலால் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர், K.மணிவண்ணன், கோட்ட கலால் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 11.12.2020 ஆம் தேதி 18.30 மணி முதல் 23.00 மணி வரை நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மாதாந்திர ஆய்வுக்கு வந்த தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையர் திரு.S.உதயகுமார் அவர்களின் TN55 AG 3333 என்ற அரசு வாகனம் மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது திரு.S.உதயகுமார், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர் என்பவரிடமிருந்தும்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .................................... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(Signature) 12.12.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

(Signature) 12/12/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
12.12.2020

Name பெயர் M. அருள்பிரியா
Rank நிலை காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு
நாகப்பட்டினம்.

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :-**

அவரது TN55 AG 3333 என்ற அரசு வாகனத்திலிருந்தும் சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 1,05,000/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி திடீர் சோதனையின்போது திரு.R.கோபிநாதன், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் என்பவரிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 49,170/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும்,மேற்படி திடீர் சோதனையின்போது திரு.C.தனபாலன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவரிடமிருந்து சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக பெற்று வைத்திருந்த மகஜரில் கண்டவாறு உள்ள மொத்த பணம் ரூபாய் 20,900/- இருந்தது திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது மகஜரில் கண்டபடி திரு.S.உதயகுமார், துணை போக்குவரத்து ஆணையர், திரு.R.கோபிநாதன், அலுவலக உதவியாளர் மற்றும் திரு.C.தனபாலன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆகியோர் நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிபள்ளி உரிமையாளர்களிடமிருந்து குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்ற அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 1,75,070/- பணம் மற்றும் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக 8 ஆவணங்கள் மற்றும் 1)திரு.S.உதயகுமார், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர், 2)திரு.R.கோபிநாதன், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் 3)திரு.C.தனபாலன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1)திரு.S.உதயகுமார், வயது.58/2020, த/பெ.செங்கோடன், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர், 2)திரு.R.கோபிநாதன், வயது.38/2020, த/பெ.ராமலிங்கம், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் 3)திரு.C.தனபாலன், வயது.52/2020, த/பெ.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.(ஒப்பம்) K.மணிவண்ணன் 121220(K.மணிவண்ணன்) கோட்ட கலால் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 11.12.2020 ஆம் தேதி மாலை சுமார் 18.30 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் உள்ள நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து

அலுவலகத்தை திரு.K.மணிவண்ணன், வயது.56/2020, த/பெ. காயாரோகணம், கோட்ட கலால் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.M.அருள்பிரியா மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து தற்காலிக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.மணிவண்ணன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் கிழக்கு மேற்காக செல்லும் சாமந்தான்பேட்டை ரோட்டின் வடக்கு பக்கம் உள்ள நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு மாதாந்திர ஆய்வுக்கு வரும் தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையர் மற்றும் அவரது அலுவலக உதவியாளர் ஆகியோருக்கு நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஓட்டுநர் பயிற்சிபள்ளிகளின் உரிமையாளர்களிடம் கையூட்டு பெற்று கொடுப்பதாகவும், நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர்களும் மேற்படி உரிமையாளர்களிடம் கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 11.12.2020 ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களிடம் தகவல் தெரிவித்ததன்பேரில், தஞ்சாவூர் ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் நாகப்பட்டினம் வட்டாட்சியர் அலுவலக கோட்ட கலால் அலுவலரை தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்மூலம் நியமணம் செய்து அனுப்பியதன்பேரில், நான் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 17.30 மணிக்கு வந்தும், அங்கிருந்து திருமதி.M.அருள்பிரியா, காவல் ஆய்வாளர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் சகிதம் இரண்டு அரசு வாகனங்களில் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 11.12.2020 ஆம் தேதி 18.00 மணிக்கு புறப்பட்டு, நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு 18.30 மணிக்கு வந்து, நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக நுழைவு வாயிலருகே வந்த TN 55 AG 3333 என்ற அரசு வாகனத்தை நிறுத்தி, மேற்படி வாகனத்தில் இருந்த 1)திரு.S.உதயகுமார், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர், 2)திரு.R.கோபிநாதன், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் 3)திரு.B.ககுன், TN 55 AG 3333 வாகனத்தின் ஓட்டுநர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் ஆகியோரிடம் திடீர் ஆய்வு விபரம் பற்றி தெரிவித்து மேற்படி நபர்களை வாகனத்திலிருந்து மேற்படி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் அழைத்துவந்து, அங்கு பணியிலிருந்த நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.D.அறிவழகன் என்பவரிடம் திடீர் ஆய்வு விபரம் தெரிவித்து திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலகமானது, நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, தெற்குபால்பண்ணைச்சேரியில் கிழக்கு மேற்காக செல்லும் சாமந்தான்பேட்டை ரோட்டின் வடக்கு பக்கம் நாகப்பட்டினம் வட்டார

போக்குவரத்து அலுவலகம் உள்ளது. மேற்படி அலுவலகத்திற்கு கிழக்கு மற்றும் மேற்கு பக்கத்தில் காலிஇடங்கள் உள்ளது. மேற்படி அலுவலகத்தின் முன்புறம் ஒரு போர்டிகோவும், மேற்படி அலுவலகத்தின் நுழைவு வாயிலை அடுத்து ஒரு பெரிய ஹாலும், மேற்படி ஹாலுக்கு வடக்கே வட்டார போக்குவரத்து அலுவலர் அறையும், மேற்படி ஹாலுக்கு மேற்கே கண்ணாடி தடுப்புடன் கூடிய PA to RTO அவர்களது அறையும், அதனை அடுத்து ஒரு ஹாலும், மேற்படி ஹாலின் மேற்கே கண்ணாடி தடுப்புடன் கூடிய அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.தனபாலன் அவர்களின் இருக்கை வடக்குபார்த்தும், மேற்படி ஹாலின் வடக்கே ஒரு மூன்றாவது ஹாலும், அதில் கிழக்கு பக்கம் அடுக்கி வைக்கப்பட்ட பதிவேடுகளும், அதனையடுத்து கழிவறைகளும் உள்ளது. மேற்படி மெயின் ஹாலின் கிழக்கே மையத்தில் மாடிபடிக்கட்டுகளும்,அதனையடுத்து கண்ணாடிதடுப்புக்கு அடுத்து கண்காணிப்பாளரின் தெற்குபார்த்த இருக்கையும், அந்த அறைக்கு தெற்கு பக்கம் அலுவலர்களின் இருக்கைகளும், மேற்படி கண்காணிப்பாளர் இருக்கையின் பின்புறம் Smart Card அறையும், அதற்கு கிழக்கே பார்வையாளர்கள் அமரும் இடமுமாக வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகத்தில் திடீர் ஆய்வின்போது வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் 1)திரு.C.தனபாலன், வயது.52/2020, த/பெ.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, 2)திரு.G.ஆனந்தராஜ், வயது.39/2020, த/பெ.கணேசன், கண்காணிப்பாளர், 3)செல்வி.M.ஜானகி, வயது.20/2020, கணக்கர், 4)திரு.M.கலைமணி, வயது.57/2020, த/பெ.முனியப்பன், உதவியாளர், 5)திரு.K.சிவக்குமார், வயது.44/2020, த/பெ.கிருஷ்ணமூர்த்தி, Data Entry Operator, 6)செல்வி.M.ஜெயஸ்ரீ, வயது.24/2020, த/பெ.மனோகரன், Data Entry Operator, ஆகியோர் அவரவர் இருக்கையில் அமர்ந்திருந்தனர். தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி அலுவலகத்தில் இருந்தவர்கள் அவரவர் இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். தற்காலிக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும், விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் மேற்படி TN 55 AG 3333 என்ற அரசு வாகனம் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தையும் சோதனை செய்யப்பட்டது. சோதனையில் சரியான முகாந்திரம் கூறிய தொகை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது, சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலும், மேலும் தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையருக்காக அவரது அலுவலக உதவியாளர் வட்டார போக்குவரத்து அலுவலர்களின் மூலமாக நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணம் என்பதன் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 1,75,070/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் | கைப்பற்றப்பட்ட ரூபாய் |
|---|---|---|---|
| 1 | திரு.S.உதயகுமார், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர் | 400 | 1,05,000 |
| 2 | திரு.R.கோபிநாதன், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் | 220 | 49,170 |
| 3 | திரு.B.அருண், TN 55 AG 3333 வாகனத்தின் ஓட்டுநர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் | 410 | - |
| 4 | திரு.D.அறிவழகன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகப்பட்டினம் | 300 | - |
| 5 | திரு.C.தனபாலன், வாகன போக்குவரத்து ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் | 370 | 20,900 |
| 6 | திரு.G.ஆனந்தராஜ், கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம் | 1,800 | - |
| 7 | செல்வி.M.ஜானகி, கணக்கர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் | 300 | - |
| 8 | திரு.M.கலைமணி, உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் | 400 | - |
| 9 | திரு.K.சிவக்குமார், Data Entry Operator | 100 | - |
| 10 | செல்வி.M.ஜெயஸ்ரீ, Data Entry Operator | 300 | - |
| | மொத்தம் | 4,600 | 1,75,070 |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அந்த பணத்திற்குண்டான சரியான முகாந்திரம் தெரிவித்ததாலும், அவர்கள் வைத்திருந்த பணம் பற்றி பணம் கையிருப்பு பதிவேடு-2020ன்படி சரியாக இருந்ததாலும் அந்த பணம் ரூபாய் 4,600/- அவரவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கீழ்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,75,070/-ம் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையர் திரு.S.உதயகுமார் என்பவரிடமிருந்தும், அவரது TN55 AG 3333 என்ற அரசு வாகனத்தின் முன்பக்க dash board-லிருந்தும் 2000 X 2 = 4000, 500 X 202 = 1,01,000, 200 X 1 = 200, 50 X

4 = 200 மொத்தம் ரூபாய் 1,05,400/- இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 400/- துணை போக்குவரத்து ஆணையர் திரு.S.உதயகுமார் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய் 1,05,000/- கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையர் அலுவலக உதவியாளர் திரு.R.கோபிநாதன் என்பவரின் பேண்ட் பாக்கெட்டுகளிலிருந்தும் 2000 X 3 = 6000, 500 X 86 = 43,000, 100 X 2 = 200, 50 X 3 = 150, 20 X 1 =20, 10 X 2 = 20 மொத்தம் ரூபாய் 49,390/- இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 220/- துணை போக்குவரத்து ஆணையர் அலுவலக உதவியாளர் திரு.R.கோபிநாதன் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையர் திரு.உதயகுமார் அவர்களுக்காக கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய் 49,170/- கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.தனபாலன் என்பவரிடமிருந்தும், அவரது அலுவலக அறையிலுள்ள அவர் பயன்படுத்தும் கணினி டேபிளின் டிராயரிலிருந்தும் 500 X 17 = 8,500, 200 X 46 = 9,200, 100 X 35 = 3,500, 50 X 1 = 50, 20 X 1 = 20 மொத்தம் ரூபாய் 21,270/- இருந்ததில், அவர் சரியான முகாந்திரம் கூறிய சொந்தப்பணம் ரூபாய் 370/- மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.தனபாலன் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டு, சரியான முகாந்திரம் கூறாததால், குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய் 20,900/- கைப்பற்றப்பட்டது. சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என்றும் மேலும் தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையருக்காக வட்டார போக்குவரத்து அலுவலர்களின் மூலமாக நாகப்பட்டினம் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி உரிமையாளர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்று வைக்கப்பட்டிருந்த பணம் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய்.1,75,070/- மற்றும் 1)நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு **2020**, 2)நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து பணக்கையிருப்புப் பதிவேடு **2020**, 3)சரக அலுவலர்கள், மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை ஆய்வுக்குறிப்பு பதிவேடு, 4)LLR வழங்கிய Online விபரங்கள் **53**, 5)DL Test பார்த்த Online விபரங்கள் **36**, 6)புதியபதிவுகள்

பற்றிய Online விபரங்கள் 47, 7)தகுதிச்சான்றுகள் புதுப்பித்தல் பற்றிய Online விபரங்கள் 11, 8)Driving License Renewal செய்யப்பட்டது பற்றிய Online விபரங்கள் 34 ஆகிய 8 ஆவணங்கள் இந்த திடீர் ஆய்வின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது வட்டார போக்குவரத்து ஆய்வாளரிடம் இன்றைய தினம் செய்யப்பட்ட பணிகள் குறித்து கேட்டபோது, LLR வழங்குதல், DL Test பார்த்தல், புதியபதிவு, தகுதிச்சான்று புதுப்பித்தல் ஆகிய பணிகள் அனைத்தும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.தனபாலன் அவர்களால் செய்யப்பட்டது என்றும், Driving License Renewal செய்தது கண்காணிப்பாளர் திரு.ஆனந்தராஜ் என்று தெரிவித்தார். மேலும் இன்று 11.12.2020 ஆம் தேதி மாலை சுமார் 18.00 மணியளவில் தஞ்சாவூர் துணை போக்குவரத்து ஆணையர் திரு.உதயகுமார் அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை மாதாந்திர ஆய்வு செய்து நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலக வருகை பதிவேடு 2020 மற்றும் சரக அலுவலர்கள், மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை ஆய்வுக்குறிப்பு பதிவேடு ஆகிய பதிவேடுகளில் கையொப்பமிட்டதாக வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.அறிவழகன் தெரிவித்தார். திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)திரு.S.உதயகுமார், வயது.58/2020, த/பெ.செங்கோடன், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர், 2)திரு.R.கோபிநாதன், வயது.38/2020, த/பெ.ராமலிங்கம், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் 3)திரு.C.தனபாலன், வயது.52/2020, த/பெ.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 11.12.2020 ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இன்று 12.12.2020 ஆம் தேதி 03.00 மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.07/2020, U/s. 102 Cr.P.C. and U/s. 7, 7-A of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

(M.ARULPRIYA),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

12/12/2020

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் மகஜர், எதிரிகள் 1)திரு.S.உதயகுமார், வயது.58/2020, த/பெ.செங்கோடன், துணை போக்குவரத்து ஆணையர், தஞ்சாவூர், 2)திரு.R.கோபிநாதன், வயது.38/2020, த/பெ.ராமலிங்கம், அலுவலக உதவியாளர், துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகம், தஞ்சாவூர் மற்றும் 3)திரு.C.தனபாலன், வயது.52/2020, த/பெ.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகப்பட்டினம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(M.ARULPRIYA), 12/12/2020.
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்